DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 285 / 2018
Deposition of PW5/ LW9

| | | |
|---|---|---|
| Name | : | திரு.குருவன் |
| Father's / Husband Name | : | நீலமுத்து |
| Village | : | டி.சுப்புலாபுரம் |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15.04.2025.
எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355–ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>**

1.) நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகள் I,II,III ஆகியவற்றில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையெழுத்துகள் முறையே **அ.சா.ஆ.5, அ.சா.ஆ.6, அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ 8.** கடந்த 7,8 வருடங்களுக்கு முன்பாக காலை 9.00 மணியளவில் டி.சுப்புலாபுரம் விலக்கு அருகே வைத்து போலீசார் வாகனங்களை சோதனை செய்து கொண்டிருந்தனர்.

2.) அந்த வழியாக சென்ற என்னை கைமறித்து போலீசார் அழைத்து கையொப்பம் போடச் சொன்னார்கள். அங்கே கூட்டமாக ஆட்கள் இருந்தார்கள். நகைகளை திருடியதாக கூறினார்கள். என்னுடன் மற்றொருவரும் கையொப்பம் செய்தார் அவர் பெயர் எனக்கு தெரியாது. நகை பிரச்சனை என்று மட்டும் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>அரசுத் தரப்பு சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து நீதிமன்ற அனுமதிக் கோரப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 5.07.2018 ம் தேதி காலை 9.00 மணியளவில் டி.சுப்புலாபுரம் விலக்கு அருகே நான் வந்து கொண்டிருந்த போது போலீசார் எதிரி சுலைமான் என்பவரை கைது செய்தார்கள் என்றும், அவர் தானாக கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை எனது மற்றும் பொன்னம்பலம் முன்னிலையில் பதிவு செய்தார்கள் என்றும் , அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அத்தாட்சிகளில் வழக்கு சொத்துக்களை கைப்பற்றினார்கள் என்றும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகளில் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல சுப்புலாபுரம் விலக்கு அருகே வைத்து தான் கையொப்பம் செய்தேன். நான் சொன்ன இடத்தில் , சொன்னது போல் கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. இந்த வழக்கு திருட்டு வழக்கு என்பது எனக்கு தெரியும் என்று நான் முதல் விசாரணையில் பொய்யாக சாட்சியம் அளித்தேன் என்று சொன்னால் சரியல்ல.

S/d.குருவன்

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.04.15 15:56:21 +0530

Judicial Magistrate,
Andipatti.

DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 285 / 2018

Deposition of PW6/ LW10

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பொன்னம்பலம் |
| Father's / Husband Name | : | ராமையா |
| Village | : | ஆண்டிபட்டி |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | தனியார் பள்ளி கணக்கர் |
| Religion | : | இந்து |
| Age | : | 64 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15.04.2025.

எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>**அரசு தரப்பு முதல் விசாரணை**</u>

1.) நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தனியார் பள்ளியில் கணக்கராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகள் I,II,III ஆகியவற்றில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையெழுத்துகள் முறையே **அ.சா.ஆ.9, அ.சா.ஆ.10, அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.ஆ.12.** கடந்த 7,8 வருடங்களுக்கு முன்பாக நேரம் நினைவில் இல்லை டி.சுப்புலாபுரம் விலக்கு அருகே வைத்து போலீசார் வாகனங்களை சோதனை செய்து கொண்டிருந்தனர்.

2.) அந்த வழியாக ஸ்கூட்டியில் வந்த ஒருநபரை பிடித்து விசாரித்தார்கள் அவரிடம் இருந்து நகை, பாஸ்புக், கம்பி ஆகியவற்றை அந்த நபரிடம் இருந்து போலீசார் கைப்பற்றினார்கள். அந்த நபரை நேரில் பார்த்தால் அடையாளம் தெரியும் , பெயர் தெரியாது. எழுத்துமூலமாக எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். என்னுடன் மற்றொருவரும் கையொப்பம் செய்தார் அவர் பெயர் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1.) இந்த வழக்கின் புகார்தாரர் பரணிதரன் என்னுடைய சித்தப்பா மகன் ஆவார். நான் டி.சுப்புலாபுரம் விலக்கில் வைத்து இருசக்கர வாகனம் மற்றும் கம்பி , பாஸ்புக், நகைகள் ஆகியவை கைப்பற்றப்பட்டது என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். நகை மற்றும் பாஸ்புக் மதுரையில் வைத்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டிருந்தால் அது பொய்யான வாக்குமூலம் என்றால் சரிதான். என்னிடம் எழுதிய தாளில் தான் கையொப்பம் பெற்றார்கள், அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நகையை கைப்பற்றியது குறித்து எழுதிவாங்கியதாக கூறினார்கள்.

2.) என்னிடம் காட்டப்படும் தட்டச்சு செய்யப்பட்டட ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்து தான் பெறப்பட்டது என்றால் சரிதான் சம்பவயிடத்தில் ஒரு கையொப்பமும் , காவல் நிலையத்தில் வைத்து ஒரு கையொப்பமும் பெற்றார்கள். நான் கூறுவது போல நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்று சொன்னாலும், என் முன்பாக இருசக்கர வாகனம், கம்பி, பாஸ்புக், மற்றும் நகை ஆகியவை கைப்பற்றப்படவில்லை என்று சொன்னாலும், போலீசார் கேட்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S/d.பொன்னம்பலம்

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.04.15 15:56:29 +0530

Judicial Magistrate,
Andipatti.